# வணிகவியல்

## அரசு மாதிரி வினாத்தாள் - 3

## விடை குறிப்புகள்

### பகுதி - அ

சரியானவிடை

| | |
|---|---|
| 1. அ. உலக அளவில் பெரியது | 11. அ. செயல்முறை விதிகள் |
| 2. ஈ. இந்திய ரிசர்வ் வங்கி | 12. அ. 90 நாட்களுக்குள் |
| 3. ஆ. ஒரு நபர் ஒரு வாக்குமுறை கடைப்பிடிக்கப் படுகிறது | 13. அ. 15 மாதங்கள் |
| 4. இ. சிற்றளவு வியாபாரம் | 14. ஈ. மேற்சொன்ன அனைவராலும் |
| 5. அ. நுகர்வோர்கள் | 15. இ. 6 |
| 6. இ. வரையறையில்லாதது | 16. ஆ. மண்டிவாலா |
| 7. இ. 1932 சட்டம் | 17. இ. ஊக்கப்படுத்துகிறது |
| 8. அ. ஒப்பந்தத்தால் | 18. ஈ. 25 |
| 9. இ. இணைவிணை | 19. ஆ. மாவட்ட தலைநகரங்களில் |
| 10. அ. இரண்டு | 20. ஆ. பொதுக் கழகம் |

### பகுதி - ஆ

**21. வாரிய அமைப்பிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.**

1. தமிழ்நாடு மின்சார வாரியம் 2. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்.
3. தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம்

**22. தனியாள் வணிகரின் பொறுப்பு எத்தகையது? அதனை விவரி.**

- தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறா பொறுப்பு ஆகும்.
- இவ் வரையறா பொறுப்பினால், வியாபாரக் கடன்களைச் செலுத்த தொழிலின் சொத்துக்கள் போதுமானதாக இல்லாவிடில், தன் சொந்த சொத்துக்களிலிருந்து கடனீந்தோர்க்கு செலுத்த வேண்டும்.
- கடனீந்தோர் உரிமையாளரின் சொத்துகளை பறிமுதல் செய்ய உரிமையுண்டு.

**23. உழையா கூட்டாளி என்பவர் யார் ?**

- இவர் தொழிலில் முதலிடுவார்
- ஆனால், நிர்வாகத்தில் பங்குபெற மாட்டார்.
- இத்தகைய கூட்டாளி உழையா கூட்டாளி ஆவார்.
- இவரை உறங்கும் கூட்டாளி அல்லது முதலிடும் கூட்டாளி என அழைப்பர்.

**24. பங்கு முனைமம் என்றால் என்ன ?**

- பங்கு வெளியீட்டு விலை, முகமதிப்பை விட அதிகமாக இருந்தால் அது முனைமத்தில் வெளியிடல் எனப்படும்.
- எ.கா. முகமதிப்பு ரூ.10, வெளியீட்டு விலை ரூ. 12 எனில், முனைமம் ரூ. 2.

**25. வாக்கெடுப்பு எவ்வாறு நடத்தப்பெறலாம்?**

- ஒரு நிறுமக் கூட்டத்தில், குரலொலியின் மூலம் அல்லது கையைத் தூக்குதல் அல்லது வாக்குப்பதிவு மூலம் வாக்கெடுப்பு நடத்தப்பெறலாம்.

**26. போல்ட்டின் ஆற்றல்கள் யாவை? ( ஏதேனும் இரண்டு )**

1. மனித செயல்பாட்டு தொகுதிகளில் இயற்கையாகவே அமைத்திருக்கின்ற செயற்திறமை இன்மையைப் போக்குகின்றது.
2. பங்கு மாற்றகங்களின் வாணிகக் கொள்திறனை அதிகரிக்கின்றது.
3. பொருந்திவராத வணிகத்தைத் தவிர்க்கிறது. நடவடிக்கைகளின் நிலையைத் தெளிவாக ஊடுருவிக் காட்டுகிறது.
4. அறிவிப்புகள் நடவடிக்கைகளின் நிலையை தாமதப்படுத்துவதில்லை.

**27. கூட்டறவு சங்கத்தின் ஏதேனும் இரண்டு குறைபாடுகளை விவரிக்க.**

1. திறமையற்ற மேலாண்மை
   - கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள உறுப்பினர்கள் அமைப்பை, மேலாண்மை செய்யப் போதுமான திறமையும் அனுபவமும் இல்லாதவர்களாக இருக்கிறார்கள்.
2. வரையறு முதல்
   - ஒரு நபர் ஒரு வாக்கு முறை, உறுப்பினர்கள் அதிக முதலீடு செய்வதை தடைசெய்கிறது. இதனால் இவ்வமைப்பு குறைந்த முதலீடுகளால் சிரமப்படுகிறது.
3. தக்க தூண்டுகோல் இல்லாமை
   - இலாப நோக்கு இல்லாமையும், குறைந்தபட்ச 9 விழுக்காடு பங்காதாயமும், மேலாண்மையின் பொறுப்புக் குறைய காரணமாகிறது. பணியாளர்கள் குறைந்த ஊதியம் பெறுவதால் கடின உழைப்பில் ஆர்வம் காட்டுவதில்லை.

**28. அரசுத் தொழில்களை எவ்வகையில் உருவாக்கலாம் ?**

- அரசே முதலீடு செய்து புதிய தொழில் நிறுவனங்களை அமைத்து, மேலாண்மை செய்யலாம்.
- ஏற்கனவே தனியார் துறையில் இயங்கிவரும் தொழில் மற்றும் வணிக அமைப்புகளை அரசின் கட்டுப்பட்டில் கொண்டுவந்து நாட்டுடைமையாக்காலாம்..

**29. இணைவினை என்பது என்ன?**

- இணைவினை என்பது, தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட ஒரு கூட்டாண்மையாகும்.
- இது குறிப்பிட்ட வணிக செயல் அல்லது வேலையை குறிப்பிட்ட காலத்திற்குள முடித்துக் கொடுக்க உருவாக்கப்படுவதாகும்.

**30. மேலாண்மை இயக்குநர் நியமிக்கப்படும் வழிகளைக் கூறுக.**

✓ மேலாண்மை இயக்குநர் ஒருவர் கீழ்க்கண்ட வழிகளில் நியமிக்கப்படுகிறார்.

1) நிறுமத்துடன் செய்து கொண்ட ஓர் ஒப்பந்தத்தின் விளைவாக.
2) அமைப்புமுறையேட்டில் அல்லது செயல்முறை விதிகளில் அடங்கியுள்ள விதிகளின் விளைவாக
3) இயக்குநரவை அல்லது நிறுமப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பெற்ற தீர்மானத்தையொட்டி.


B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT.

## பகுதி - இ

### 31. இந்து கூட்டுக்குடும்ப வணிக அமைப்புப் பற்றிக் குறிப்பு வரைக.

- இந்து கூட்டுக் குடும்ப வணிக அமைப்பில் இந்தியா தலைசிறந்து விளங்குகிறது.
- இந்து குடும்ப வணிக முறையில் தந்தை, தாய், மகன், மகள், மகனின் மகன், மகனின் மகள் ஆகியோர் அடங்குவர்.
- அவர்களது சொத்துக்கள் அனைத்தும் கூட்டுச் சொத்தாகும்.
- அவர்கள் வணிகத்தை குடும்பத் தலைவர் மூலம் நடத்துவர்.
- இக்குடும்பங்கள் பெரும்பாலும் விவசாயம், கைத்தொழில்கள், சிறு தொழிற்சாலை போன்ற தொழில்களைச் சார்ந்திருக்கும்.
- இத்தகைய வியாபார அமைப்பிற்கு இந்து கூட்டுக் குடும்ப வணிகம் என்று பெயர்.
- இது இந்தியாவில் மட்டுமே காண முடியும்.

### 32. தனியாள் வணிகத்தால் சமுதாயத்திற்கு விளையும் நன்மைகள் மூன்றினை கூறுக.

1. <u>வேலையில்லா பிரச்சனைக்குத் தீர்வு</u>
   - குறைந்த கல்வியறிவு உடையவருக்கும், கல்வியறிவு அற்றவருக்கும் வேலை வாய்ப்பு அளிக்கிறது.
   - சமுதாயத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதில், தனிவணிகம் பெரும் பங்கு வகிக்கிறது
2. <u>முதலீட்டிற்கான வாய்ப்பு</u>
   - சிறு முதலீட்டாளர்கள், குறைந்த முதலுடன் தொழில் தொடங்க வாய்ப்பளிக்கிறது.
   - சிறு முதலீட்டாளர்களின் சேமிப்புகளை, உற்பத்திக்குப் பயன்படுத்த உதவுகிறது.
3. <u>குறைந்த விலையில் பொருட்களை அளித்தல்</u>
   - நிர்வாகச் செலவு குறைவாக உள்ளதால், தனி வணிகர் பொருட்களின் மீதான அதிக பட்ச விலையை விட குறைவான விலைக்கு பொருட்களை விற்பனை செய்கிறார்.
4. <u>சிறு உற்பத்தியாளருக்கு உதவுதல்</u>
   - உள்ளூர் உற்பத்தியாளரிடமிருந்து பெரும்பான்மையான பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.
   - இதனால் உள்ளூர் சிறு உற்பத்தியாளர்கள், தனிவணிகரால் பயன்பெறுகின்றனர்.

### 33. கூட்டாண்மை ஒப்பாவனத்தில் உள்ள பொருளடக்கங்கள் யாவை? ( ஏதேனும் ஆறு )

1. நிறுவனத்தின் பெயர்
2. ஒப்பந்த நாள் மற்றும் தொழில் புரியும் இடம்
3. அனைத்து கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி
4. நிறுவனம் மேற்கொள்ள இருக்கும் தொழிலின் தன்மை
5. கூட்டாண்மையின் கால வரையறை
6. ஒவ்வொரு கூட்டாளியும் வழங்கயிருக்கும் முதல் தொகை
7. ஒவ்வொரு கூட்டாளியும் நிறுவனத்திலிருந்து எடுக்கும் தொகை
8. இலாபப் பகிர்வு விகிதம்
9. உழைக்கும் கூட்டாளிகளுக்கு கொடுக்கப்பட வேண்டிய ஊதியம்
10. முதல் மற்றும் எடுப்பு மீது வட்டி.

### 34. பிடிப்பு நிறுமமும் --- துணை நிறுமமும் என்றால் என்ன?

ஒரு நிறுமம் வேறொரு நிறுமத்தின்,

1. அனைத்து இயக்குநர்களை அல்லது பெரும்பான்மை இயக்குநர்களை நியமிக்கும் அல்லது நீக்கும் நிலையில் இருப்பின், அல்லது
2. வேறொரு நிறுமத்தின் நேர்மைப் பங்கு முதலில் 50 விழுக்காட்டுக்கு மேல் வைத்திருப்பின் அல்லது
3. வேறொரு நிறுமத்தில் உள்ள வாக்குகளில் 50 விழுக்காட்டுக்கு மேலான வாக்குகளைச் செலுத்தும் நிலையில் இருப்பின், அந்நிறுமம் பிடிப்பு நிறுமமாகும்.
4. இவ்வாறு கட்டுப்படுத்தப்படும் வேறொரு நிறுமம் **துணை நிறுமம்** எனப்படும்.

### 35. பகராள் என்பவர் யார் ? அவருக்குரிய உரிமை என்ன?

- ஒரு பொதுக் கூட்டத்தில் தனக்கு பதில் கலந்து கொள்ள உறுப்பினரால் நியமிக்கப்படும் ஒரு நபரைக் குறிப்பதே பகராள் எனப்படும்.
- பகராளை நியமிக்கும் ஆணைப் பத்திரமும் பகராள் எனும் சொல் குறிக்கும்
- பகராளுக்கு எத்தகைய உரிமையும் இல்லை என்பதை, கீழ்கண்ட செய்திகள் மூலம், நாம் அறிந்து கொள்ள முடிகிறது.
  1. பகராள் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம். ஆனால்,அங்கு பேசும் உரிமை அவருக்கு இல்லை.
  2. வாக்குப்பதிவு நடைபெற்றாலொழிய, பகராளுக்கு வாக்கு செலுத்தும் உரிமை இல்லை.

### 36. பரஸ்பரநிதி யாருக்கு ஏற்றது? ஏன்?

- பரஸ்பர நிதி முதலீட்டாளர்களுக்கு ஏற்றது.
- ஏனெனில், பரஸ்பர நிதிகள் சிறு முதலீட்டாளர்களின் சேமிப்பைத் திரட்டி, அவற்றை அரசு மற்றும் பிற நிறுமங்களின் பத்திரங்களில் முதலீடு செய்து, மூலதன ஆதாயம் பெறுவதுடன்,வட்டி மற்றும் பங்காதாயத்தையும் பெறுகிறது.
- 'சிறுதுளி பெருவெள்ளம்' என்ற கோட்பாட்டின்படி இவை செயல்படுகின்றன.

### 37. கூட்டுறவுப் பண்டகசாலைப் பற்றி எழுதுக.

- இது அதிகமாக கிராமப்புறங்களில் காணப்படும்.
- விவசாயப் பொருட்களை சேமித்து வைக்கும் வசதியை உறுப்பினர்களுக்கு அளிக்கிறது.
- மேலும் முற்றுப்பெற்ற பொருட்கள் சந்தையில் நல்ல விலை கிடைக்கும்வரை சேமித்து வைக்க உதவுகிறது.

### 38. பொதுத் துறை - தனியார் துறை வேறுபாடுத்துக. ( ஏதேனும் மூன்று )

| வ.எண் | தலைப்பு | பொதுத் துறை | தனியார் துறை |
|---|---|---|---|
| 1 | நோக்கம் | சேவை செய்வது | இலாபம் ஈட்டுவது |
| 2 | நிதி | வரையறா நிதி, மக்களின் சேமிப்பை திரட்ட முடியும் | வரையறுத்த நிதி, மக்களின் சேமிப்பை திரட்ட முடியாது |
| 3 | பொருளாதார செறிவு | தடுக்கப்படுகிறது | தூண்டப்படுகிறது |
| 4 | தொழில் தன்மை | தனியார் துறையால் புறக்கணிக்கப்பட்ட தொழில்கள் ஏற்று நடத்தப்படுகிறது | அபாயம் இல்லாத, இலாபம் அதிகம் உள்ள தொழில்கள் ஏற்று நடத்தப்படுகிறது |
| 5 | நாட்டின் வளங்கள் | பாதுகாக்கப்படுகிறது | சுரண்டப்படுகிறது |


B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT.

39. **வரையறு கூட்டாளி - பொதுக் கூட்டாளி வேறுப்படுத்துக.**

- பொதுக்கூட்டாளி, மற்றும் வரையறு கூட்டாளி என இருவகை கூட்டாளிகள் வரையறுத்த கூட்டாண்மையில் உள்ளனர்.

வரையறு கூட்டாளி

- கூட்டாளிகளின் பொறுப்பு வரையறுக்கப்பட்டிருந்தால், அத்தகைய கூட்டாளிக்கு, வரையறு கூட்டாளி என்று பெயர்.

பொதுக் கூட்டாளி

- முதலீடு செய்து, தொழிலை நிர்வகிக்கும் பொறுப்பேற்றுள்ள கூட்டாளிக்கு, உழைக்கும் கூட்டாளி அல்லது பொதுக் கூட்டாளி என்று பெயர்.
- இவருடைய பொறுப்பு வரையறாப் பொறுப்பாகும்.

40. **ஏதேனும் மூன்று ஊக வணிகர்களை பற்றி எழுதுக..**

காளை:

1. பத்திரங்கள் எதிர்காலத்தில் விலையேறும் என்று எதிர்பார்ப்பவர்.
2. எல்லாம் நன்மையாகவே நடைபெறும் என்ற மனப்பாங்கு கொண்டவர்.
3. இவர் தெஜீவாலா என அழைக்கப்படுகிறார்.

கரடி :

1. பத்திரங்கள் எதிர்காலத்தில் விலை குறையும் என்று எதிர்பார்ப்பவர்.
2. எதிலும் பின்னோக்கிய மனப்பாங்கு கொண்டவர்.
3. இவர் மண்டிவிலா என அழைக்கப்படுகிறார்.

கலைமான் :

1. முன்னெச்சரிக்கை உடையவர்.
2. பங்குகள் முனைமத்தில் விற்க்கப்படும் என அறிந்தவுடன் புதிய வெளியீடுகளுக்கு விண்ணப்பம் செய்வர்.
3. இவர் முனைம வேட்டையாளர் என அழைக்கப்படுகிறார்.

## பகுதி - ஈ

41. **அ) ஏதேனும் ஐந்து தொழிலமைப்புகளைப் பற்றி சுருக்கமாக எழுதுக.**

### தனிநபர் நிறுவனங்கள்

1. தனிவணிகர் :
   - தனி நபரால் உருவாக்கப்பட்டு கட்டுப்படுத்தப்படும் வியாபார அமைப்பு தனி வணிக அமைப்பாகும்.
   - இதனை, எவர் மேலாண்மை செய்கிறாரோ அவரே தனி வணிகர் என்று அழைக்கப்படுகிறார்.
   - தொழிலுக்குத் தேவையான முதலை தன் சொந்த சேமிப்பிலிருந்து செலுத்துகிறார்.
   - இலாபம் அல்லது நட்டம் அவரையே சாரும்.
2. இந்து கூட்டுக் குடும்பம்:
   - இந்து கூட்டுக்குடும்ப வணிகமுறையில் தந்தை, தாய், மகன், மகள், மகனின் மகன், மகனின் மகள் ஆகியோர் அடங்குவர்.
   - சொத்துகள் அனைத்தும் கூட்டுச் சொத்து ஆகும்.
   - அவர்கள், வணிகத்தை குடும்பத் தலைவர் மூலம் நடத்துவர்.
   - குடும்ப தலைமை உறுப்பினருக்கு கர்த்தா என்று பெயர்.
   - குடும்ப உறுப்பினர்களுக்கு கூட்டு வாரிசுதாரர் என்று பெயர்.
3. கூட்டாண்மை
   - கூட்டாண்மை என்பது இருவர் அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களின் ஒப்பந்தத்தின் மூலம் ஏற்படுவதாகும்.
   - கூட்டாண்மை சட்டத்திற்கு உட்பட்ட தொழிலை செய்ய வேண்டும்.
   - கூட்டாளிகளின் இலாபம் அல்லது நட்டத்தை ஒப்புக்கொண்ட விகிதத்தின்படி பகிர்ந்துகொள்வர்
4. கூட்டுப்பங்கு நிறுமம் :
   - ஒரு நிறுமம் என்பது சட்டத்தால் உருவாக்கப்பட்ட ஒரு செயற்கை நபர்.
   - தனிநபர் தன்மையுடையது. வழி வழியாகத் தொடரக்கூடிய நீண்ட ஆயுட்காலம் உடையது.
   - பொது முத்திரை கொண்டு செயல்படுவது ஆகும்.
   - கூட்டுபங்கு நிறுமத்தின் முதல், பல அலகுகளாக பிரிக்கப்பட்டிருக்கும். இதற்கு பங்கு என்று பெயர்.
   - எவரொருவர் பங்குகளை வைத்திருக்கிறாரோ அல்லது வாங்குகிறாரோ அவரை பங்குதாரர் என அழைக்கின்றனர்.
5. கூட்டுறவு அமைப்புகள் :
   - கூட்டுறவு சங்கம் என்பது நபர்கள் தாமாகவே அமைத்துக் கொள்ளும் சங்கமாகும்.
   - கூட்டுறவு சங்கங்களின் முக்கிய நோக்கம் சேவை செய்வது. இரண்டாவது நோக்கம் இலாபம் ஈட்டுவது ஆகும்.
   - உள்ளூரில் ஒரே இடத்தில் வசிப்பவர்கள் தனது பொருளாதார நலனை மேம்படுத்த ஒன்று சேரும் தன் விருப்ப மன்றமாகும்.
   - இதில் அனைத்து உறுப்பினர்களும் சமமாக கருதப்படுவர்.
6. பன்னாட்டு நிறுமங்கள் :
   - பன்னாட்டு நிறுவனம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் தனது கிளைகளை நிறுவி வியாபாரத்தை நடத்துவதாகும்.

(எ.கா.) 1. யூனிலீவர் லிமிடெட் 2. யூனியன் கார்பைடு 3. கோகோ கோலா கழகம் 4. பிலிப்ஸ் 5. இன்டர்நேஷனல் பிசினஸ் மெஷீன்

( அல்லது )

41. **ஆ) இந்தியாவில் கூட்டுறவு இயக்கம் தோற்றம் பற்றிச் சுருக்குமாக எழுதுக.**

- சாணக்கியரின் அர்த்தசாஸ்திரத்தில் ,நமது நாட்டில் அன்று நிலவிய கூட்டுறவு உணர்வு பற்றி ஆங்காங்கு சொல்லப்பட்டுள்ளது.
- பிரிட்டிஷ்காரர்கள், நமது நாட்டில் ஆட்சி செலுத்தத் துவங்கிய நாள் தொட்டு, நமது பண்டைய ஊரக மேலாண்மை முறை மங்கி மடியத் தொடங்கியது.
- ஆனால் நவீன கூட்டுறவு இயக்கம் 1904-ம் ஆண்டில் நமது நாட்டில் தோற்றம் பெற்றது.
- அன்று நாட்டுப் புறங்களிலும், நகரங்களிலும் வாழ்ந்து கொண்டிருந்த உழவர்கள், கைவினைஞர், தொழிலாளிகள் போன்றோர் வட்டிக்கடைக்காரர்களின் கொடும்பிடியில் அகப்பட்டு அவதியுற்றனர்.
- ஜெர்மனி நாட்டில் கடன் கொடுப்போரின் கொடும் பிடியிலிருக்கும் ஊரக மக்களை உய்வித்து வெற்றிவாகை சூடிய கூட்டுறவு ஊரக நாணயச் சங்கங்களை ஏன் நமது நாட்டிலும் துவங்கி நம் மக்கள் படும் துயர் துடைக்கக்கூடாது எனக் கருதிய தமிழக அரசு அதன் ஐ.சி.எஸ் அலுவலரான திரு. பிரடரிக் நிக்கல்சன் என்பவரை அந்நாட்டுக்கு அனுப்பி அங்கு இயங்கிவந்த கூட்டுறவு ஊரக வங்கிகளின் அமைப்பு, செயல்முறை, அவற்றை நமது நாட்டில் துவக்குவதற்கான சாத்தியக் கூறுகள் ஆகிய செய்திகளை ஆய்ந்தறிந்து வருமாறு செய்தது.
- இந்தியாவிலும் அத்தகைய ஊரக நாணயச் சங்கங்களைத் துவக்கலாம் எனப் பரிந்துரைத்து 1895-ம் ஆண்டு அவர் அறிக்கை சமர்ப்பித்தார்.
- இதன் பயனாக மைய அரசு 1904-ம் ஆண்டு நாணயக் கூட்டுறவுச் சங்க சட்டம் இயற்றிக் கூட்டுறவு இயக்கத்துக்கு நமது நாட்டில் அடித்தளம் போட்டது.


B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT.

- ஊரக மக்களுக்கு குறைந்த வட்டிக்குக் கடன் கொடுக்கும் நோக்கத்தோடு நாணயக் கூட்டுறவுச் சங்கங்கள் பல இச்சட்டத்தின் கீழ்த் துவக்கப்பட்டன.
- நாணயச் சங்கங்கள் தவிர, பிறவகைக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கவும், கூட்டுறவு மைய வங்கிகள், மாநிலக் கூட்டுறவு வங்கி போன்றவை நிறுவவும் இச்சட்டம் வழிவகை செய்யவில்லை.
- எனவே இந்திய அரசு கூட்டுறவுச் சங்கச் சட்டம் என்ற விரிவான சட்டத்தை 1912-ம் ஆண்டு இயற்றி வெவ்வேறு வகையான கூட்டுறவுச் சங்கங்களையும், கூட்டுறவு இணையங்களையும் துவக்குவதற்கு வகைசெய்தது.
- 1919- ம் ஆண்டு கூட்டுறவு என்னும் பொருள் மாநில அரசின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பொருளாக மாறியதை
- அடுத்து, பல மாநில அரசுகள் அந்தந்த மாநிலங்களில் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களை ஒழுங்குபடுத்தும் நோக்கத்தோடு தனித்தனியாகக் கூட்டுறவுச் சட்டங்கள் இயற்றிக் கொண்டன.
- அன்றைய தமிழக அரசும், தமிழ்நாட்டுக் கூட்டுறவுச் சட்டத்தை 1932-ம் ஆண்டு இயற்றியது.
- இச்சட்டத்தை 1961-ம் ஆண்டு மாற்றியமைத்தது. இன்று தமிழகத்தில் இயங்கிவரும் கூட்டுறவுச் சங்கங்களைக் கட்டுப்படுத்தி வருவது அதன் 1961-ம் ஆண்டு கூட்டுறவுச் சங்க சட்டமாகும்.

## 42. அ) தனியாள் வணிக அமைப்பின் அமைப்பின் தன்மைகள் ஐந்தினை விளக்குக

1. <u>தனிநபர் உரிமையும் கட்டுப்பாடும்</u> :
   - ஒரு தனி நபரால் நடத்தக் கூடிய வியாபார அமைப்பு தனியாள் வணிகமாகும்.
   - அவரே இதன் உரிமையாளர்.
   - அவர் ஒருவரே தனி உரிமையாளராகவும் மற்றும் வணிகத்தின் தலைவராகவும், யாருடைய குறுக்கீடும் இல்லாமல் சுதந்திரமாக வணிக நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்.
2. <u>மூலதனம்</u> :
   - தனியாள் வணிகத் தொழிலமைப்பில் ஒரு நபர் மட்டுமே முதலீடு செய்கிறார்.
   - அவர் நண்பர்களிடமோ, உறவினர்களிடமோ, நிதிநிறுவனங்களிடமோ, கடன் பெற்றும் முதலீடு செய்யலாம்.
3. <u>வரையறாப்பொறுப்பு</u>
   - தனியார் வணிகத்தில் உரிமையாளரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது.
   - இவ்வரையறாப் பொறுப்பினால் தனிவணிகர் தன் வியாபாரக் கடன்களைச் செலுத்த தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லாவிடில், தன் சொந்த சொத்துகளிலிருந்து கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டும்.
4. <u>இலாப நட்டம்</u> :
   - வியாபாரத்திலிருந்து கிடைக்கும் முழு இலாபத்தையும் அனுபவிக்கும் உரிமை தனிநபருக்கே உரியது.
   - அது போலவே நட்டம் ஏற்படுமாயின் அம்முழு நட்டத்தையும் தனிநபரே ஏற்க வேண்டும்.
   - எனவே, “எல்லாம் அவரே, அவரே எல்லாம்” என்ற கோட்பாடு தனியாள் வணிகத்திற்கு பொருந்தும்.
5. <u>தனிச் சட்டம் இல்லை</u> :
   - கூட்டாண்மையை ஒழுங்கு படுத்த இந்தியக் கூட்டண்மைச் சட்டம், கூட்டுப்பங்கு நிறுமத்தை ஒழுங்கு படுத்த இந்திய நிறுமச்சட்டம், கூட்டுறவுச் சங்கங்களை ஒழுங்கு படுத்த இந்திய கூட்டுறவுச் சட்டம் இருப்பதைப் போல, தனிவணிகத்தை ஒழுங்குபடுத்த தனியாக சட்டம் ஏதுமில்லை.
6. <u>பதிவு</u> :
   - தனியாள் வணிகத்தை ஒழுங்குபடுத்த தனியாக சட்டம் ஏதுமில்லை.
   - மேலும் பதிவு செய்ய வேண்டிய அவசியம் தனியாள் வணிகத்திற்கு இல்லை

( அல்லது )

## 42.ஆ) கூட்டாளிகளின் உரிமைகள், கடமைகள் யாவை? ( ஒவ்வொன்றிலும் ஏதேனும் ஐந்து)

<u>கூட்டாளிகளின் உரிமைகள்</u>

1. ஒவ்வொரு கூட்டாளிக்கும் தொழிலை நடத்தவும், மேலாண்மையில் பங்கேற்கவும் உரிமை உண்டு.
2. ஒவ்வொரு கூட்டாளிக்கும் நிறுவன தொடர்பான பிரச்சனைகளுக்கு தங்கள் கருத்தை தெரிவிக்க உரிமையுண்டு.
3. முக்கிய முடிவுகளை எடுக்கும் முன்னர் ,ஒவ்வொரு கூட்டாளிக்கும், தங்களை கலந்து ஆலோசிக்க வேண்டும் எனக்கோர உரிமை உண்டு.
4. ஒவ்வொரு கூட்டாளிக்கும் நிறுவன கணக்குகளை கண்காணிக்கவும், நகலெடுக்கவும் உரிமை உண்டு.
5. ஒவ்வொரு கூட்டாளிகளும் இலாபத்தில் பங்குபெற உரிமை உண்டு.
6. ஒவ்வொரு கூட்டாளிகளும் ,தொழிலுக்கு வழங்கிய கடன் மற்றும் முன்பணம் மீது 6 சதவிகிதம் வட்டிபெற உரிமை உண்டு.

<u>கூட்டாளியின் கடமைகள்</u>

1. ஒவ்வொரு கூட்டாளியும் தங்களுடைய கடமைகளை கவனமாகவும், நாணயமாகவும் நிறைவேற்ற வேண்டும்.
2. ஒவ்வொரு கூட்டாளியும் விசுவாசமாகவும் உண்மையாகவும் நடந்து கொள்ள வேண்டும்.
3. ஒவ்வொரு கூட்டாளியும் தனக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகார வரம்புக்குள் செயல்பட வேண்டும்.
4. ஒவ்வொரு கூட்டாளியும் நிறுவன நட்டத்தை பகிர்ந்து கொள்ள கடமைப்பட்டவர்.
5. ஒவ்வொரு கூட்டாளியும் தான் அறிந்து செய்த தவறினால் ஏற்பட்ட நட்டத்துக்கு ஈட்டுறுதி செய்தல் வேண்டும்.
6. பிற கூட்டாளிகளின் இசைவில்லாமல் கூட்டாளி தன் பங்கினை பிறருக்கு மாற்றவோ அல்லது வழங்கவோ கூடாது.

## 43. அ) பொறுப்புகளின் அடிப்படையில் நிறுமங்கள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன?

1. <u>பங்குகளால் வரையறுக்கப்பட்ட நிறுமங்கள்</u>
   - இவ்வகை நிறுமங்களில், ஒரு பங்குதாரரின் பொறுப்பு, அவர் வைத்துள்ள பங்குகள் மீது செலுத்திப் பெறமல் உள்ள தொகை அளவிற்கு வரையறை செய்யப்பட்டுள்ளது.
   - தன்னுடைய பங்குகளுக்கான முழுத்தொகையையும் செலுத்திவிட்டால், நிறுமங்களின் கடன்களைத் தீர்க்கப் போதுமான சொத்துக்கள் இல்லையென்றாலும், மீண்டும் பணம் வழங்குமாறு கேட்கப் படமாட்டார்.
   - இந்தியாவில் காணப்பெறும் எண்ணற்ற நிறுவனங்கள் இவ்வகையைச் சார்ந்தவை.
2. <u>பொறுப்புறுதியால் வரையறை செய்யப்பட்ட நிறுமங்கள்</u>
   - பொறுப்புறுதி நிறுமத்தில், நிறுமம் கலைப்பிற்கு உள்ளாகும் பொழுது, அதன் கடன்களைத் தீர்க்கப் போதுமான சொத்துக்கள் இல்லா நிலையில், தானே முன்வந்து தருவதாக உறுதியளித்து இருந்த தொகை அளவிற்கு மட்டுமே பங்குநரின் பொறுப்பு வரையறை செய்யப்படுகிறது.
   - அத்தகைய நிறுமத்தில் பங்கு முதல் இருக்கலாம். அல்லது பங்கு முதல் இன்றியும் இயங்கலாம்.
   - பங்கு முதலைப் பெற்றிருக்கும் பொறுப்புறுதி நிறுமத்தில், உறுப்பினரின் பொறுப்பு,
     அ) தான் வைத்திருக்கும் பங்குகள் மீது செலுத்தப் பெறாதிருக்கும் தொகையும்,
     ஆ) தான் தருவதாக ஒப்புறுதி அளித்த தொகையுமாகும்.


B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT.

- ❖ அறிவியல் மேம்பாடு, கலை, விளையாட்டு, அறம் வளர்க்கும் நோக்கங்களுடன் இவ்வகை நிறுமங்கள் தொடங்கப் பெறுகின்றன.
- ❖ அதவாது இலாபம் ஈட்டும் நோக்குடன் இவை செயல்படுவதில்லை.

3. <u>வரையறாப் பொறுப்பு நிறுமங்கள்</u>
- ❖ இந்நிறுமங்களில் உறுப்பினர்களின் பொறுப்பு வரையறையற்றது.
- ❖ அதாவது பங்குகள் மீது செலுத்தப் பெறாதிருக்கும் தொகையுடன் இவர்களின் பொறுப்பு அடங்கிவிடுவதில்லை.
- ❖ தன் தனிப்பட்ட சொத்துக்களை விற்றாவது, நிறுமக் கடன்களைத் தீர்த்தாக வேண்டும்.
- ❖ இவ்வகை நிறுமங்கள் இல்லையென்றே சொல்லலாம்.

( அல்லது )

43. ஆ) நிறுமச் செயலரின் முக்கியத்துவங்கள் ஐந்தினை எழுதுக.

1) நிறுமம் வகுத்துள்ள திட்டங்களை நிறைவேற்றுவதிலேயே அவர் பெரும்பாலும் ஈடுபட வேண்டியிருப்பினும், நிறுமத்தின் சார்பில் முக்கியமான செயல்களை அவர் ஆற்ற வேண்டியுள்ளது. நிறுமத்தின் முகவராக அவர் செயல்படுவதில்லையெனினும், நிர்வாகத் தொடர்பான ஒப்பந்தங்களில் அவர் கையெழுத்திட வேண்டியுள்ளது.
2) தொழில்மயமாதல் பெருகி வரும் நிலையில், நிறும நிர்வாகத்தில் சிக்கல் பெருகுகிறது. பல்வகைச் சட்ட நுணுக்கங்களை அறிந்து வைத்திருத்தலும், அவற்றைத் துல்லியமாகப் புரிந்து கொள்ள சட்டம், கணக்கியல், நிர்வாகம், தொழிலுறவு போன்ற அனைத்திலும் தெளிவான அறிவு தேவைப்படுகிறது. இதனால், செலுத்தப் பெற்ற பங்கு முதல் ரூ.50 இலட்சம் அல்லது அதற்குமேல் உள்ள ஒவ்வொரு நிறுமமும், உரிய தகுதிகளைப் பெற்றிருக்கும் நிறுமச் செயலரை நியமிக்க வேண்டும் என்று நிறுமங்கள் சட்டம் அதனைக் கட்டாயப்படுத்தி உள்ளது.
3) வருமான வரிச் சட்டம் 1961-ம், பிற சட்டங்களும் செயலரை நிறுமத்தின் முதன்மை அதிகாரியாக ஏற்றுக்கொள்வதிலிருந்து, செயலரின் முக்கிய பங்கினைப் புரிந்து கொள்ளலாம்.
4) நிறும மற்றும் இயக்குநரவைக் கூட்டங்களில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களையொட்டியே பெரும்பாலான செயல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. எந்தக் கூட்டத்தையும் சிறப்பாக நடத்த அனைத்து முன் முயற்சிகளையும் மேற்கொள்வது செயலர்தான்.
5) நிறுமத்தின் சார்பில் விளக்கம் தரக்கூடியவர் செயலரே. தன்னுடைய ஆளுமையின் மூலம், நேர்மை, காலத்திற்கேற்ப செயல்படுதல், தொழில் பற்றி முழு அறிவு போன்றவற்றாலும் நிறுமம் பற்றிய கருத்தை புகழ்வாய்ந்த ஒன்றாக உயர்த்துகிறார். நற்பெயர் ஈட்டிட வழிவகுக்கிறார்.
6) இயக்குநரவை சார்பில் அவர்கள் முகவர் போன்றே இருந்து, மேலாண்மைக்கும், ஊழியர்கள், பங்குநர்கள், வாடிக்கையர் ஆகியோருக்குமிடையே உறவுப் பாலம் அமைக்கிறார். அவர்களிடையே எழும் கசப்புணர்வுகளை அகற்றி, தவறாகப் புரிந்துகொண்டிருப்பதைப் போக்கி, தன் ஊக்கத்தாலும், முனைப்பாலும், உறுதிமிக்க உள்ளத்தாலும் அவர்களிடையே அன்புமிக்க உறவை வலுப்படுத்துகிறார்.

## 44. அ) செபி அமைப்பின் பணிகளை எழுதுக. ( ஏதேனும் ஐந்து )

1. பங்கு மாற்றகங்களின் வியாபாரத்தை ஒழுங்கு படுத்துதல்.
2. இடைத்தரகர்களான பங்குத் தரகர்கள், துணைத் தரகர்கள், வெளியீட்டு வங்கியர், ஒப்புறுதியாளர்கள் மற்றும் பத்திரச் சந்தையுடன் தொடர்புடைய மற்ற இடைத்தரகர்களின் செயல்பாடுகளைப் பதிவுசெய்தல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்.
3. பரஸ்பர நிதியங்கள் உள்ளிட்ட முதலீட்டு நிறுவனங்களைப் பதிவு செய்து, ஒழுங்கு படுத்துதல்.
4. சுயக் கட்டுப்பாட்டு நிறுவனங்களைத் தோற்றுவித்தலும் ஒழுங்குபடுத்துதலும்
5. பத்திரச் சந்தையில் மோசடியான மற்றும் நேர்மையற்ற வணிக நடவடிக்கைகளைத் தடை செய்தல்.
6. முதலீட்டாளர்களிடையே விழிப்புணர்ச்சியை வளர்த்தல் மற்றும் இடைத்தரகர்களுக்கான பயிற்சி அளித்தல்.
7. பத்திரங்களுக்கான உள் வணிகத்தைத் தடை செய்தல்.
8. பங்குகளைக் கணிசமான அளவில் வாங்கி, நிறுமங்களை எடுத்துக் கொள்ளல் போன்ற நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல்.
9. பங்கு மாற்றங்களிலிருந்து அவற்றின் அமைப்பு போன்ற விவரங்கள் பெறுவது, பங்கு மாற்றங்களைப் பரிசோதனை செய்தல், விசாரணை மற்றும் தணிக்கை செய்தல்.
10. மத்திய அரசால் ஒப்படைவு செய்யப்பட்ட பணிகளைச் செய்தல்

( அல்லது )

## 44.ஆ) தனியாள் வணிகத்தின் எல்லா குறைகளையும் கூட்டாண்மைகளைகிறதா? விளக்குக.

- ❖ தனியாள் வணிகத்திலுள்ள குறைகளை நீக்க ஏற்பட்டது தான் கூட்டு வணிக அமைப்பு. தனியாள் வணிகத்தில் முதல் மற்றும் மேலாண்மைத் திறன் ஆகியவை ஒரு வரம்புக்குட்பட்டது.
- ❖ தனி ஒரு நபரால் வியாபார நடவடிக்கைகள் அனைத்தையும் நேரடியாக கண்காணிக்க இயலாது.
- ❖ எனவே அதிக நபர்கள் வியாபாரத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள். இவ்வாறு அதிக நபர்களை இணைத்துக் கொண்டு, நடத்தப்பட்ட வியாபாரம் கூட்டாண்மை எனப்படுகிறது.

➢ எனினும், தனியாள் வணிகத்தில் காணப்படும் சில குறைபாடுகள், கூட்டாண்மையிலும் காணப்படுகின்றது. அவைகளவன :

1. <u>வரையறாப் பொறுப்பு</u> :
   - ❖ தனியாள் வணிகரைப் போலவே, கூட்டாளிகளின் பொறுப்பும், வரையறுக்கப்படாதது.
   - ❖ இக் குறைப்பாட்டை கூட்டாண்மை நீக்கவில்லை.
2. <u>குறைவான முதல்:</u>
   - ❖ தனியாள் வணிகத்தைப் போலவே கூட்டாண்மையில், அதிக முதல் திரட்டும் வாய்ப்பு குறைவு.
   - ❖ மிக அதிக அளவில் முதல் தேவைப்படும் தொழில்களுக்கு கூட்டாண்மை அமைப்பு பொருந்தாது. ஏனெனில், கூட்டாளிகளின் கடன் வாங்கும் திறன் குறைவு.
3. <u>நீடித்த வாழ்வின்மை</u> :
   - ❖ கூட்டுப்பங்கு நிறுமத்தைப்போன்று, இவ்விரு அமைப்புகளுக்கும் நீடித்த வாழ்வு கிடையாது

## 45. அ) மேலாண்மை இயக்குநர் - மேலாளர் வேறுபாடுத்திக்காட்டுக.

| மேலாண்மை இயக்குநர் | மேலாளர் |
|---|---|
| நிர்வாகத்தின் மிகுஅதிகாரங்களைப் பெற்றிருக்கும் இயக்குநர். | மேலாளரின்அதிகாரம், இயக்குநரின் அதிகாரத்தை காட்டிலும் பரவலானது. |
| இயக்குநர் மட்டுமே, மேலாண்மை இயக்குநராக இருக்க முடியும். | மேலாண்மை இயக்குநராக இருக்க வேண்டிய அவசியம் இல்லை |
| இரு நிறுமங்களில், இயக்குநர் பணியாற்றலாம் | ஒரு நிறுமத்தில்தான் மேலாளராக பணியாற்ற முடியும் |
| ஒரு நிறுமத்தில், ஒன்றுக்கு மேற்பட்ட மேலாண்மை இயக்குநர் இருக்கலாம் | ஒரு மேலாளர் மட்டும் தான் இருக்க முடியும் |


B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT.

45.ஆ) ஒரு நல்ல அமைப்பின் தன்மைகளுள் ஐந்தினை மட்டும் விளக்குக.

1. நோக்கங்களின் ஒருமை :
   - ஒரு நிறைவேற்ற இருக்கும் நோக்கம் என்பது இலக்கினை அடையக் கூடியதாக இருக்க வேண்டும்.
   - ஒரு அமைப்பானது அதன் குறிக் கோள்களைத் தெளிவாக முடிவு செய்யவேண்டும்.
   - அமைப்பின் ஒவ்வொரு நடவடிக்கையும் , குறிக்கோள்களை நிறை வேற்றக் கூடிய வகையில் இருக்க வேண்டும்.
2. வேலைப் பகிர்வு :
   - தொழில் அமைப்பின் மொத்தப் பணி சுமைகளையும் பகிர்வு செய்யவேண்டும்.
   - இது துறைப்படுத்துதல் என அழைக்கப்படுகிறது.
   - அனைத்து நடவடிக்கைகளையும் திட்டமிடுதல் வேண்டும்.
   - ஒரு சக்தி வாய்ந்த அமைப்பிற்கு சிறப்பீடுபாடு ஏற்புடையதாகும்.
3. கட்டுப்பாட்டு வீச்செல்லை:
   - ஒரு அதிகாரி எத்தனை கீழ்ப்பணியாளர்களை சிறந்த முறையில் நிர்வகிக்க முடியும் என்பதை கட்டுப்பாட்டு வீச்செல்லை குறிக்கும்.
   - ஓர் உயர் அலுவலர் தனக்குக் கீழ், நியாயமான எண்ணிக்கையிலுள்ள கீழ்ப்பணியாளர்களை மேற்பார்வை செய்ய வேண்டும்.
4. தரவரிசைக் கோட்பாடு:
   - ஆணையுரிமையின் வரிசை உயர் மட்டத்திலுள்ள உயர் அலுவலரிடமிருந்து, கீழ்மட்டத்திலுள்ள தொழிலாளர்கள் வரை படிப்படியாக கீழ்நோக்கி வரவேண்டும்.
   - இதற்கு கட்டளை இணைப்பு என்று பெயர்.
5. கட்டளையொருமை / ஒருமித்த உத்தரவு :
   - ஒவ்வொரு பணியாளரும் ஆணைகளை ஓர் உயர் அதிகாரியிடமிருந்து பெற வேண்டும். ஒரு பணியாளர் இரண்டு உயர் அதிகாரிகளின் கீழ் பணியாற்றுவது கடினம்.
   - இரண்டு உயர் அதிகாரிகளின் கீழ் பணியாற்றுவது தவிர்க்கப்பட வேண்டும். அப்படியிருந்தால் குழப்பமும் ஒழுங்கின்மையும் ஏற்படும்.

---

46. அ) கூட்டாளிகளின் வகைகள் யாவை? விளக்குக. ( ஏதேனும் ஐந்து )

1. உழைக்கும் கூட்டாளி :
   5. இவர் தொழிலில் முதலிடுவார்.
   6. தொழில் நிர்வாகத்தில் பங்கு பெறுவார்.
   7. இவரின் பொறுப்பு வரையறா பொறுப்பு ஆகும்.
   8. இவரை பணிபுரியும் கூட்டாளி அல்லது மேலாண்மைக் கூட்டாளி என அழைப்பர்.
2. உறங்கும் கூட்டாளி அல்லது உழையாக் கூட்டாளி :
   4. இவர் தொழிலில் முதலிடுவார்.
   5. தொழில் நிர்வாகத்தில் பங்கு பெறமாட்டார்.
   6. இவரை உழையாக் கூட்டாளி அல்லது முதலிடும் கூட்டாளி என அழைப்பர்.
3. பெயரளவு கூட்டாளி :
   5. இவர் தொழிலில் முதலீடு செய்ய மாட்டார்.
   6. தொழில் நிவாகத்தில் பங்கு பெற மாட்டார்.
   7. இலாபத்தில் இவருக்கு பங்கு இல்லை.
   8. கூட்டாளியாக தன் பெயரை பயன்படுத்த அனுமதிப்பார்.
4. இலாபத்தில் மட்டும் பங்கேற்கும் கூட்டாளி :
   1. இவர் இலாபத்தில் மட்டும் பங்குபெறுவார்.
   2. நட்டத்தில் பங்குபெற மாட்டார்.
   3. தொழில் நிர்வாகத்திலும் பங்குபெற மாட்டார்.
   4. இவரின் பொறுப்பு வரையறா பொறுப்பு ஆகும்.



5. முரண் தடைக் கூட்டாளி :
   1. இவர் உண்மைக் கூட்டாளி அல்ல.
   2. தானும் ஒரு கூட்டாளி என நம்பச் செய்கிறார்.
   3. இதை நம்பி சிலர் நிறுவனத்திற்கு கடன் கொடுப்பர்.
   4. இவர் அவர்களுக்கு பொறுபாகிறார்.

( அல்லது )

46.ஆ) **செயல்முறை விதிகளில் உள்ள ஏதேனும் பத்து உள்ளடக்கங்களை எழுதுக.**

1. நிறுமச் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை - A எந்தளவிற்கு இந்நிறுமத்திற்குப் பொருந்தாது என்பதை, நிறுமம் தனக்கென வகுக்கும் செயல்முறை விதிகளில் குறிப்பிட வேண்டும்.
2. தொடக்க ஒப்பந்தங்கள்ஏதேனும் இருப்பின், அவற்றை ஏற்றுக்கொள்ளுதல் அல்லது நிறைவேற்றுதல் குறித்து.
3. பங்கு முதல், பங்குகளின் பல்வேறு வகைகள், ஒவ்வொரு வகைக்கும் உள்ள உரிமைகள்.
4. பங்குகள் ஒதுக்கீடு, பங்குகள் மீது அழைப்பு கோரல் தொடர்பானவை.
5. பங்குகள் ஒறுப்பிழப்பு அல்லது பறிமுதல் செய்தல், பறிமுதல் செய்யப்பட்ட பங்குகளை மறுவெளியீடு செய்தல்.
6. பங்குச் சான்றிதழ்கள், பங்காணைகள் அனுப்புதல் குறித்து.
7. பங்குகள் மாற்றுதல் அல்லது வாரிசுமுறை மாற்றம் (வாரிசுக்கு மாற்றித்தருதல்) குறித்த வழிமுறைகள்.
8. பங்குகளைப் பங்கிருப்பாக மாற்றுதல்.
9. பங்கு அல்லது கடன் பத்திர வெளியீட்டில் ஒப்புறுதியாளர்கட்கு கொடுக்க வேண்டிய தரகுத் தொகை.
10. பங்கு முதலை மாற்றி அமைத்தல்.
11. இயக்குநர்களை நியமித்தல், அவர்களின் தகுதிகள், ஊதியம் குறித்தவை.
12. இயக்குநர்களின் கடன் வாங்கும் அளவு.

---

47. அ) **அதிக இடரை விரும்பாத முதலீட்டாளருக்கு ஏற்ற சேமிப்பு முறை எது? விளக்குக.**

- முதலீட்டாளர்கள் தங்கள் சேமிப்பை இலாபகரமான, வருவாயை ஈட்டித் தரும் பத்திரங்களில் முதலீடு செய்வதற்காகப் பத்திரங்களை வாங்குகின்றனர்.
- பொதுவாக இவர்கள் தாம் வாங்கிய, பத்திரங்களை நீண்டகாலம் வரை வைத்திருப்பவர்கள்.
- இவர்கள் இலாபத்தை ரொக்கமாகப் பெற்றுக் கொள்கின்றனர்.

**பத்திரச் சந்தை**

- பத்திரச் சந்தை என்ற சொல், பத்திரங்களை வாங்கி விற்கப்படும் இடம் மற்றும் வாங்கி விற்பவர்களையும் குறிக்கும்.

பத்திரச் சந்தையை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை:

1. முதன்மைச் சந்தை
2. இரண்டாம் நிலைச் சந்தை
   - முதன்மைச் சந்தை என்பது, புதிய வெளியீடுகளின் சந்தையைக் குறிக்கும்.
   - இரண்டாம் நிலைச் சந்தை என்பது, முதன்மைச் சந்தையில் வெளியிடப்பட்ட பங்குகளை மறு விற்பனை செய்வதாகும்.

48. ஆ) **தொழில் துறையில் அரசு ஈடுபடுவதால் விளையும் நன்மைகள் யாவை?**

1. <u>பல்வகை உற்பத்தி செய்ய உதவுவது :</u>
   - இலாபம் ஈட்டுவதிலேயே குறியாக இருக்கும் தனியார் தொழில் முனைவோர், இலாப வாய்ப்பு மிகுந்த தொழில்களில் மட்டும் முதலீடு செய்ய விரும்புவர். இலாப வாய்ப்புகள் அதிகம் இல்லாத, அதே சமயம் நாட்டுக்குத் தேவையான,தொழில்களில் முதலீடு செய்ய விரும்பமாட்டார்கள்.
   - தனியார் துறை மேற்கொள்ள அஞ்சும் தொழில்களில் முதலீடு செய்து மக்களுக்குச் சேவையாற்றுவதற்கு அரசு நிறுவனங்களை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகின்றது.
2. <u>அடிப்படைத் தொழில்கள் வளர்ச்சி :</u>
   - பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத தொழில்களை அடிப்படைத் தொழில்கள் எனலாம்.
   - எடுத்துக்காட்டாக இரும்பு, எஃகு ஆலைகள், வேதியியல் தொழில்கள் போன்றவை அடிப்படைத் தொழில்களாகும்.
   - இத்தகைய தொழில்கள் அரசுத் தொழில்களாகவே இருப்பதே சாலச்சிறந்தது.
3. <u>பேரளவு முதலீட்டு நிறுவனங்கள் :</u>
   - சில தொழில் நிறுவனங்களில் பேரளவு முதலீடு செய்யப்பட வேண்டும்.
   - மேலும், அந்நிறுவனங்களில் தொழில் உற்பத்தித் தொடக்கக் காலம் நீண்டதாக இருக்கும்.
   - தனியார் தொழில் முனைவோர்களால் அப்பேரளவு முதலீட்டினை அளிக்கமுடியாது.
   - எ.கா : இரயில், கப்பல் கட்டுவது, மின்சக்தி
   - எனவே, அத்துறையில் அரசே தனக்குச் சொந்தமான நிறுவனங்களை ஏற்படுத்தும்.
4. <u>இன்றியமையாத வசதிகளை நல்குவது :</u>
   - குடிநீர், மின் உற்பத்தி, மின் சக்தி, எரிவாயு, போக்குவரத்து, தகவல் தொடர்பு போன்றவை நாடு முழுவதும் அன்றாடம் தேவைப்படும் இன்றியமையாத வசதிகள் ஆகும்.
   - இத்தேவைகள் மிகக் குறைந்த விலையில் பூர்த்தி செய்யப்படவேண்டும்.
   - எனவே, இவ்வசதிகளைச் செய்து தரும் அமைப்புகள் அரசுத் தொழில்களாகவே இயங்க வேண்டும்.
   - அவற்றைத் தனியாரிடம் ஒப்படைக்க இயலாது.
5. <u>முற்றுரிமை நிறுவனங்களை ஏற்படுத்துவது :</u>
   - ஒரு நாட்டை அயல் நாடுகளின் தாக்குதலிலிருந்து காப்பது மிகவும் இன்றியமையாதது.
   - நாட்டின் பாதுகாப்புச் சார்ந்த தொழில்கள் தனியார் வசமிருந்தால் ஒரு நெருக்கடி ஏற்படும் பொழுது அவர்கள் அரசுக்கு முழு ஒத்துழைப்பை நல்காமல் போகும் நிலை உருவாக வாய்ப்புண்டு.
   - மேலும் அவர்கள் நாட்டின் பாதுகாப்பு குறித்த இரகசியங்களை எதிரி நாடுகளுக்குச் சொல்லக்கூடிய அபாயமும் இருக்கிறது.
   - எனவேதான், பாதுகாப்புத் தொழில்களை எப்போதும் அரசே ஏற்று நடத்தி வருகிறது.
6. <u>அனைத்துப் பகுதிகளும் சமமாக பொருளாதார வளர்ச்சி பெறுதல் :</u>
   - தொழில், உற்பத்தி வளர்ச்சியின் நோக்கம் நாட்டிற்குத் தேவையான அனைத்து உற்பத்தித், தொழில்களை ஏற்படுத்துவதேயாகும். நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சமச்சீரான முன்னேற்றம் ஏற்பட வேண்டும். தனியார் துறையினர், இலாபம் ஈட்ட வாய்ப்பு இல்லாத, மற்றும் நாட்டின் பின் தங்கிய பகுதிகளில் தொழில் நிறுவனங்களை அமைக்க விரும்புவதில்லை.
   - இப்பகுதிகளில் தொழில்களை அமைக்கத் தனியார் துறையினரை அரசு ஊக்குவிக்கலாமே தவிர, கட்டாயப்படுத்த முடியாது.
   - அந்நிலையில் அரசு அங்கு தொழில்களை நிறுவுவது சாலச் சிறந்தது.
7. <u>நிறை வேலைவாய்ப்பை உறுதிப்படுத்துதல் :</u>
   - நிறை வேலைவாய்ப்புப் பொதுவுடமை உற்பத்தியினாலேயே ஏற்படும்.
   - முழு வீச்சில் செயல்படும் தனியார் துறையைப் பெற்றுள்ள வளர்ச்சியடைந்த நாடுகள்கூட நிறை வேலை வாய்ப்பைப் பெறுவதில்லை.
   - அரசு பொருளாதாரத் துறையில் கவனம் செலுத்தித் திட்டங்கள் தீட்டவேண்டும். இப்பணிகளின் ஒரு பகுதியாக அரசே தொழில்களையும் தோற்றுவித்து நடத்த வேண்டும்.


B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT.